நாள்: 24.04.2026
OS. 105/2022
பெயர் சுமதி
பி.வா.சா.1

குறுக்கு விசாரணை

எனக்கு திருமணத்திற்கு முன்பே வாதி நீலாவதிக்கு திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். அதனால் அவர் திருமணமத்தின் போது அவருக்கு என்ன நகை , சீர் சீராட்டுகள் செய்யப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது. வழக்கு சொத்தும், குடும்பத்தில் உள்ள வேறு சொத்துக்களும் கனக்கையா என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அவருக்கு லட்சுமய கவுடர், கிருஷ்ணசாமி கவுடர், கோபால் கவுடர் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். கனக்கையா கவுடர் காலமாகனபின்னர் அவரது மகன்கள் 04.05.1970ல் ஒரு பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரிதான். என் மாமனார் பெயர் கோபால் கவுடர் ஆகும். கோபால் கவுடர் வழக்கு சொத்தை பொறுத்து யாதொரு ஆவணமும் எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான்.

கோபால் கவுடர் இறந்தபின்னர் அவரது நேரடி வாரிசுகள், என் கணவர் அவரது தாயாரான பார்வதி அம்மாள் மனைவி மாரியம்மாள், மகன் ஹரிதேவன், மகள் நீலாவதி இவ்வழக்கு வாதி என்றால் சரிதான். பார்வதி அம்மாள், மாரியம்மாள் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு வலது புறம் உள்ள சொத்தை நடராஜன் என்பவருக்கு கிரையம் கொடுக்கப்பட்டது, நான் என் மகன், மாரியம்மாள், இவ்வழக்கு வாதி நீலாவதி ஆகியோர்கள் சேர்ந்து நடராஜனுக்கு கிரையம் கொடுத்தோம். கோபாலின் வாரிசுகள் என்பதால் தான் வாதியும், நானும் சேர்ந்து நடைபாதை கிரைய ஆவணத்தை எழுதிக்கொடுத்தோம். அந்த நடராஜனுக்கு எழுழதிக்கொடுத்த கிரைய ஆவணத்தில் கிடைத்த கிரையத்தொகையில் ஈவு தொகை அனைவரும் பெற்றுக்கொண்டோம். வாதி நீலாவதிக்கு ஈவு தொகை கொடுத்தோம்.

வழக்கு சொத்தையும், அதற்கு வடபுறம் நடராஜனுக்கு கிரையம் கொடுத்த சொத்தையும், நாங்கள் கூட்டாக அனுபவித்து வந்ததால் தான் நாங்கள் அனைவரும் வாதி நீலாவதியிடம் கையொப்போம் பெற்றோம் என்றால் சரிதான். என் நாத்தனார் வாதி நீலாவதிக்கு நாங்கள் வீடு வாங்கி கொடுத்தோம் என்பதற்கு எழுத்துப்பூர்வமாக ஆவணங்கள் எதுவும் உண்டா என்றால் இல்லை. அந்த விவரம் என் மாமியார்

சொல்லி தான் தெரியும். எனக்கு நேரடியாக தெரியாது. வாதிக்கு 10 பவுன் நகை, 15 ஆயிரம் சீதன பொருட்களை வாங்கி கொடுத்தோம். வீடு வாங்கி கொடுத்தோம். அவ்வப்போது வந்து வாங்கி செல்வார்கள். நான் சொல்வது போல் மேற்படி பணம் மற்றும் சீதனமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக நான் சொல்வது உண்மை என எடுத்துக்கொண்டால் கூட சட்டப்படி வாதிக்கு பாகம் உண்டு என சொன்னால் சரியல்ல.

எங்கள் குடும்ப சொத்து சம்பந்தமாக கூடலூரில் உள்ள 3 மத்தியஸ்தர்களை வைத்து வாய் மொழியாக பேசி முடித்தோம். நான் சொல்வது போல் எந்த ஒரு பேச்சு வார்த்தையும் நடைபெறவில்லை என்றும், அப்படி சமாதானம் பேசியிருந்தால் நாங்கள் எழுத்து பூர்வமான விடுதலை ஆவணம் எழுதி வாங்கியிருப்போம் என்றால் என் கணவர் அவரது சகோதரி எந்த உரிமையும் கோரமாட்டார் என்ற நம்பிக்கையில் எழுதி வாங்கவில்லை. நான் சொல்வது போல் சமாதானம் பேச்சு வார்த்தை நடத்தியிருந்தாலும் கூட வாதிக்கு சட்டப்படியான பாகம் கிடைக்கத்தது என்றால் சரியல்ல. பஞ்சாயத்து நடந்தது என்றால் சார் பதிவாளர் அலுவலகம் செல்லாமல் கூட எழுதி வாங்கியிருப்போம் என்றால் சரியல்ல. வாதிக்கு கோபால் கவுடரின் மகள் என்ற நிலையில் சட்டப்படியான பாக உரிமை உண்டு என்றும், எனவே வாதி கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

M SHIVAJI CHELLIAH

Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.04.24 13:47:38 +0530

சார்பு நீதிபதி
உத்தமபாளையம்